இணைப்பு VIII

(820 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 29—சுற்றுலா

அறிவிப்புகள், 2009—2010

1. நாகப்பட்டினம் மாவட்டம், திருக்கடையூர் அருள்மிகு அபிராமி கோயில்

சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக குடிநீர் வசதி, கழிப்பறை மற்றும் உடை மாற்றும் அறை, வைப்பறை, இளைப்பாறும் இடம், ஓட்டுநர்கள் ஓய்வறை, வாகனம் நிறுத்துமிடம், வாகனம் பழுது பார்க்கும் வசதி, பெட்ரோல் பங்கு, சுற்றுலா தகவல் மையம், அங்காடி, வங்கி உடனடி பணம் எடுக்கும் வசதி, சைக்கிள் மற்றும் சுற்றுச்சூழலுக்குகந்த வாகன வசதி ஏற்படுத்த ரூ.75.00 இலட்சம் வழங்கப்படும்.

2. வால்பாறையில் ஒருங்கிணைந்த சுற்றுலா வசதிகள், கோயம்புத்தூர் மாவட்டம்

கிரேடு 3 நகராட்சியில் தேயிலைத் தோட்டங்களுக்கு மத்தியில் வால்பாறை உள்ளது. வால்பாறை 217.87 சதுர மீட்டர் பரப்பில் 95,107 மக்கள் தொகையுடன் சிறப்பாக அமைந்துள்ளது. வால்பாறை மலையடிவாரத்தில் உள்ள குரங்கு நீர்வீழ்ச்சிக்கு பெருமளவில் மக்கள் வந்து செல்கின்றனர். வால்பாறையிலிருந்து 10 கி.மீ. தொலைவில் கருமலை வேளாங்கண்ணி தேவாலயம் மற்றும் பாலாஜி கோயில் ஆகியவை அமைந்துள்ளன. வால்பாறையிலிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ள சோலையாரில் பளிங்கிலான விநாயகர் சிலை அமைந்துள்ளது. அண்டிமுடி எஸ்டேட்டில் உள்ள முருகன் ஆலயம் முடீஸ் செல்லும் வழியில் அமைந்துள்ளது. ஆசியாவில் இரண்டாவது பெரிய சோலையார் அணைப் பகுதியின் வனப் பகுதியில் உள்ள நீர்வீழ்ச்சியை (இங்கிருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ளது) இங்கிருந்து காண முடியும்.

சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக குடிநீர் வசதி, கழிப்பறை மற்றும் உடை மாற்றும் அறை, வைப்பறை, இளைப்பாறும் இடம், ஓட்டுநர்கள் ஓய்வறை, வாகனம் நிறுத்துமிடம், வாகனம் பழுது பார்க்கும் வசதி, பெட்ரோல் பங்கு, சுற்றுலா தகவல் மையம், அங்காடி, வங்கி உடனடி பணம் எடுக்கும் வசதி, சைக்கிள் மற்றும் சுற்றுச்சூழலுக்குகந்த வாகன வசதி ஏற்படுத்த ரூ.100.00 இலட்சம் வழங்கப்படும்.

3. மிகவும் பிரபலமடையாத சுற்றுலாத் தலங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஈரோடு மாவட்டம் அந்தியூரில் சுற்றுலா மேம்பாடு

பிரபலமடைந்த சுற்றலாத் தலங்களுடன் பிரபலமடையாத சுற்றுலாத் தலங்களையும் காண தமிழ்நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளை ஊக்குவிக்கும் வகையில், சுற்றுலாத் தலங்களின் தன்மையைப் பொறுத்து அதனைக் காண வழிவகை செய்ய வேண்டியுள்ளது.

சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக ஈரோடு மாவட்டத்தில் உள்ள அந்தியூர் குதிரைச் சந்தைப் பகுதியில் குடிநீர் வசதி, கழிப்பறை மற்றும் உடை மாற்றும் அறை, வைப்பறை, இளைப்பாறும் இடம், ஓட்டுநர்கள் ஓய்வறை, சிற்றுண்டி விடுதி, வாகனம் நிறுத்துமிடம், வாகனம் பழுது பார்க்கும் வசதி, பெட்ரோல் பங்கு, சுற்றுலா தகவல் மையம், அங்காடி, வங்கி உடனடி பணம் எடுக்கும் வசதி, சைக்கிள் மற்றும் சுற்றுச்சூழலுக்குகந்த வாகன வசதி ஏற்படுத்த ரூ.15.00 இலட்சம் வழங்கப்படும்.

4. வேலூர், காரைக்குடி, திருவண்ணாமலை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள புதிய சுற்றுலா அலுவலகங்களுக்கு கட்டமைப்பு வசதிகள் செய்து தருதல்

வேலூர், காரைக்குடி, திருவண்ணாமலை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள நான்கு புதிய சுற்றுலா அலுவலகங்களுக்கு ரூ. 15.00 இலட்சம் (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) செலவில் 2009-2010 ஆம் ஆண்டு கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்படும்.

5. சுற்றுலாத் தலங்களை சுத்தமாக வைத்துக் கொள்வது, சிற்பங்கள் மேல் எழுதி அவற்றை அழுக்காக்குவது, சுற்றுலாப் பயணிகளிடம் நட்புடன் நடந்து கொள்வது, சிறந்த முறையில் பயணிகளுக்கு வழிகாட்டுவது தொடர்பாக சுற்றுலாப் பயணிகளிடையே விழிப்புணர்வு அதிக அளவில் ஏற்படுத்த களப் பயிற்சி வழங்கப்படும்.

6. சுற்றுலாத் தலங்களைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ள சுற்றுலாத் துறையில் பணியாற்றும் அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் பயண பயிற்சித் திட்டம் நடத்தப்படும்.

2009 ஜுலை 7]

7. தமிழகத்தின் தொன்மை, கட்டடக்கலை மற்றும் பண்பாடு ஆகியவற்றை சர்வதேச அளவில் விளம்பரப்படுத்த முகாம்கள் நடத்தப்படும்.

8. சுற்றுலா வளர்ச்சி, உணவுடன் உறையுள் திட்டம், புராதனச் சின்னங்களைப் பாதுகாத்தல் மற்றும் சுற்றுலா நட்புணர்வு ஆகியவை பற்றிய கருத்தரங்கம் நடத்தப்படும்.

9. சுற்றுலா விழாக்களில் நாட்டுப்புறக் கலைகளை விளம்பரப்படுத்தி, நாட்டுப்புறக் கலைஞர்களை அதிக அளவில் ஊக்குவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

10. சுற்றுலாப் பயணிகள் மற்றும் உள்ளூர் மக்கள் பெரிதும் பயன் பெறும் வகையில் சென்னை மாநகரில் உள்ள பூங்காக்களில் 'பூங்காவில் பூங்காற்று' என்ற தலைப்பில் இசை நிகழ்ச்சிகளும், கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்படும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

11. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தங்கும் விடுதிகள் மற்றும் சுற்றுலாப் பயண திட்டங்கள் செல்லிடத் தொலைபேசி மூலம் முன்பதிவு செய்யப்படும்.

12. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தங்கும் விடுதிகளில் 20 விழுக்காடு சலுகை பெற வழங்கப்படும் தங்க அட்டைகள் மற்றும் பிளாட்டினம் அட்டைகள் இனி கணினிமூலமும் வழங்கப்படும்.

13. தமிழ்நாடு சுற்றுலா விடுதி, திருச்சிராப்பள்ளி ரூ. 98 இலட்சம் செலவில் கூடுதலாக ஒன்பது அறைகளுடன் விரிவுபடுத்தப்படும்.

14. தமிழ்நாடு சுற்றுலா விடுதி, தஞ்சாவூர் ரூ.99 இலட்சம் செலவில் கூடுதலாக பன்னிரெண்டு அறைகள் மற்றும் சிறிய கூட்டரங்கத்துடன் விரிவுபடுத்தப்படும்.

15. சர்வதேச சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்காக இராமேசுவரத்தில் ரூ.100 இலட்சம் செலவில் கூடுதலாக சுற்றுலா வளாகம் கட்டப்படும்.

16. இரயில் மற்றும் சாலை சுற்றுலா பயணத் திட்டம் ஆந்திர மாநிலம் ஐதராபாத்திலிருந்தும் தொடங்கப்படும்.

[2009 ஜூலை 7

கலை பண்பாட்டுத் துறை

அறிவிப்புகள், 2009–2010

1. கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரியில் கவின் கலை குறித்த அருங்காட்சியக் கலைக் கூடம் அமைத்தல்

இந்நிதியாண்டில் கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரியில் கவின் கலை குறித்த அருங்காட்சியக் கலைக் கூடம் அமைக்கப்படும். இதற்காக ரூ.50,00,000/- ஒதுக்கீடு செய்யப்படும்.

2. காஞ்சிபுரம், சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி மண்டல கலை பண்பாட்டு மையங்களுக்கு ஒளி அச்சு இயந்திரம் (Photocopying Machine) வாங்குதல்

காஞ்சிபுரம், சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி மண்டல கலை பண்பாட்டு மையங்களுக்கு ஒளி அச்சு இயந்திரம் (Photocopying Machine) வாங்க இந்நிதியாண்டில் ரூ.2,00,000/- கூடுதல் செலவில் மேற்கொள்ளப்படும்.

3. கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிக்கு நவீன ஒளி அச்சு இயந்திரம் (Photocopying Machine) வாங்குதல்

கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிக்கு நவீன ஒளி அச்சு இயந்திரம் (Photocopying Machine) வாங்க ரூ.1,00,000/- ஒதுக்கீடு செய்யப்படும்.

4. மாவட்ட அரசு இசைப்பள்ளி மாணவர்களுக்கு தரை விரிப்புகள்

அரசு மாவட்ட இசைப்பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு தரை விரிப்புகள் வாங்க ரூ.5,00,000/- மாணவர் நலன் கருதி ஒதுக்கீடு செய்யப்படும்.

5. சென்னை மற்றும் கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிகளில் சிற்பக் கலைப் பிரிவிற்கு மெட்டல் காஸ்டிங் பவுண்ட்ரி (Metal Casting Foundry) அமைத்தல்

சென்னை மற்றும் கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிகளில் மாணவர்கள் பயன்பெற சிற்பக் கலைப் பிரிவிற்கு மெட்டல் காஸ்டிங் பவுண்ட்ரி (Metal Casting Foundry) அமைக்கும் பணிகள் ரூ.3,50,000/- கூடுதல் செலவில் மேற்கொள்ளப்படும்.

2009 ஜூலை 7]

6. சென்னை மற்றும் கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு வரைவு மேசைகள்/நாற்காலிகள்/நெடுமனைகள் வாங்குதல்.

சென்னை மற்றும் கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் வசதிக்காக வரைவு மேசைகள்/நாற்காலிகள்/நெடுமனைகள் வாங்க ரூ.7,45,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

7. சென்னை அரசு கவின் கலைக் கல்லூரிகளில் சுடுமண் பிரிவில் பயிலும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் சூட்டடுப்பு (Kiln) வாங்குதல்.

சென்னை அரசு கவின் கலைக் கல்லூரிகளில் சுடுமண் பிரிவில் பயிலும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் சூட்டடுப்பு (Kiln) ரூ.6,65,000/- கூடுதல் செலவில் வாங்கப்படும்.

8. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு இசைக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு தரை விரிப்புகள் வாங்குதல்.

சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு இசைக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு வசதியாக தரை விரிப்புகள் வாங்க ரூ.2,00,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

9. சென்னை அரசு இசைக் கல்லூரியின் வகுப்பறைகளில் மின்விசிறிகள், குழல் விளக்குகள் பொருத்துதல்.

சென்னை அரசு இசைக் கல்லூரியில் பயிலும் மாணவர்களின் நலன்கருதி, வகுப்பறைகளில் மின் விசிறிகள், குழல் விளக்குகள் பொருத்தும் பணிகள் ரூ.1,00,000/- கூடுதல் செலவில் மேற்கொள்ளப்படும்.

10. சென்னை அரசு இசைக் கல்லூரியின் நூலகப் பயன்பாட்டிற்கு கண்ணாடியுடன் கூடிய பீரோக்களும், மாணவர்கள் அமர்ந்து படிப்பதற்கு நீண்ட மேசைகள் உள்ளிட்ட மரத்தளவாடங்கள் வாங்குதல்.

சென்னை அரசு இசைக் கல்லூரியின் நூலகப் பயன்பாட்டிற்கு கண்ணாடியுடன் கூடிய பீரோக்களும், மாணவர்கள் அமர்ந்து படிப்பதற்கு நீண்ட மேசைகள் உள்ளிட்ட மரத்தளவாடங்கள் வாங்க ரூ.1,00,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

[2009 ஜூலை 7

11. கலை பண்பாட்டு இயக்ககத்திற்கு கணினிகள், பிரிண்டர்கள், மென்பொருட்கள் உள்ளிட்ட கணினி பொருட்கள் வாங்குதல்.

கலை பண்பாட்டு இயக்ககத்தின் பயன்பாட்டிற்காக கணினிகள், பிரிண்டர்கள், மென்பொருட்கள் உள்ளிட்ட கணினி பொருட்கள் வாங்க ரூ.3,50,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

12. மண்டல கலை பண்பாட்டு மையங்களில் மின்னணு ஆளுமை (e-Governance), தொலைபேசி வசதி, இணைய வசதி (Internet-Broad Band) ஏற்படுத்துதல்.

கலை பண்பாட்டுத் துறையின் மண்டல கலை பண்பாட்டு மையங்களில் மின்னணு ஆளுமை (e-Governance), தொலைபேசி வசதி, இணைய வசதி (Internet-Broad Band) ஏற்படுத்தும் பணிகள் ரூ.90,000/- கூடுதல் செலவில் மேற்கொள்ளப்படும்.

13. சென்னை மற்றும் கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிகளில் மாணவர்களின் பயன்பாட்டிற்கு கணினிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல்.

சென்னை மற்றும் கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிகளில் மாணவர்களின் பயன்பாட்டிற்கு கணினிகள் மற்றும் உபகரணங்கள் வாங்க ரூ.2,25,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

14. சென்னை அரசு இசைக் கல்லூரியின் நூலகப் பயன்பாட்டிற்கு கணினி மற்றும் பிரிண்டர் வாங்குதல்.

சென்னை அரசு இசைக் கல்லூரியின் நூலகப் பயன்பாட்டிற்கு கணினி மற்றும் பிரிண்டர் ரூ.45,000/- கூடுதல் செலவில் வாங்கப்படும்.

15. மாமல்லபுரம் அரசு கட்டட சிற்பக் கலைக் கல்லூரியில் பயிலும் மாணவர்களின் படைப்புகளைக் கொண்டு கலைக் கண்காட்சி நடத்துதுல்.

மாமல்லபுரம் அரசு கட்டட சிற்பக் கலைக் கல்லூரியில் பயிலும் மாணவர்களின் படைப்புகளைக் கொண்டு கலைக் கண்காட்சி நடத்த ரூ.1,00,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

16. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம் மறைந்த கலைஞர்களின் வாழ்க்கை வரலாற்றை தொகுத்து நூலாக வெளியிடுதல்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம் மறைந்த கலைஞர்களின் வாழ்க்கை வரலாற்றைத் தொகுத்து நூலாக ரூ.2.00 இலட்சம் செலவில் வெளியிடப்படும்.

2009 ஜூலை 7]

17. ஓவிய ஆசிரியர்களுக்கு புத்துணர்வு பயிற்சி முகாம்.

பள்ளிகளில் பணிபுரியும் ஓவிய ஆசிரியர்களுக்கு சென்னை மற்றும் கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிகளில் புத்துணர்வு பயிற்சி முகாம்மூலம் ஓவியப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும்.

18. ஓவிய ஆர்வமுள்ள மாணவ, மாணவியருக்கு இலவச ஓவியப் பயிற்சி முகாம்.

மேனிலைக் கல்வி முடித்த ஓவிய ஆர்வம் உள்ள மாணவ மாணவியருக்கு கோடை விடுமுறை நாட்களில் சென்னை மற்றும் கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிகளில் இலவசமாக ஓவியப் பயிற்சி நடத்தப்படும்.

19. ஓவிய ஆர்வமுள்ள குழந்தைகளுக்கு விடுமுறை நாட்களில் இலவச ஓவியப் பயிற்சி முகாம்.

ஓவிய ஆர்வம் உள்ள குழந்தைகளுக்கு சென்னை மற்றும் கும்பகோணத்தில் உள்ள பூங்காக்களில் காலாண்டு, அரையாண்டு மற்றும் கோடை விடுமுறை நாட்களில் இலவச ஓவியப் பயிற்சி முகாம் நடத்தி கண்காட்சிகள் நடத்தப்படும்.

20. தொடக்கக் கல்வி குழந்தைகளுக்கு ‘மலரும் மொட்டும்’ என்ற பெயரில் பயிற்சி.

இளங்கவின்கலை பயிலும் மாணவர்களைக் கொண்டு தொடக்கக் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு குளிர் கால விடுமுறையில் ‘மலரும் மொட்டும்’ என்ற பெயரில் ஓவியப் பயிற்சி நடத்தப்படும்.

21. மாணவர்களுக்கு குளிர்கால விடுமுறையில்—‘கற்றவை கற்பித்தல்’ என்ற பெயரில் ஓவியப் பயிற்சி முகாம்

முதுகவின்கலை பயிலும் மாணவர்களைக் கொண்டு உயர்நிலை /மேனிலை பயிலும் மாணவர்களுக்கு குளிர்கால விடுமுறையில் ஓவியப் பயிற்சி/விழிப்புணர்வு ‘கற்றவை கற்பித்தல்’ என்ற பெயரில் முகாம்கள் நடத்தப்படும்.

22. புராதனச் சின்னங்கள் குறித்து விழிப்புணர்வு முகாம்.

சுற்றுலாத் தலங்களில் உள்ள பண்டைய புராதன சின்னங்களின் முக்கியத்துவம் குறித்தும், அதனைப் பாதுகாப்பது குறித்தும் அரசு கவின்கலைக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களைக் கொண்டு

பள்ளிக் குழந்தைகளுக்கும், கல்லூரி மாணவர்களுக்கும் விழிப்புணர்வு முகாம் நடத்தப்படும்.

23. மாற்றுத் திறனுடைய மாணவர்களுக்கு சிற்ப மற்றும் ஓவியப் பயிற்சி.

ஊனமுற்ற, மன வளர்ச்சி குன்றிய மாணவர்களுக்கு (மாற்றுத் திறனுடையோர்) சிற்பம், ஓவியம்மூலம் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும்.

24. கூடுதலாக 500 நலிந்த கலைஞர்கள் தெரிவு செய்யப்பட்டு நிதியுதவி வழங்குதல்.

கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 1500 கலைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு, இதுவரை 6,891 நலிந்த கலைஞர்கள் நிதியுதவி பெற்று வருகிறார்கள். 2005 ஆம் ஆண்டு வரை ரூ.500/- ஆக இருந்த உதவித்தொகையை இவ்வரசு இரட்டிப்பாக்கி ரூ.1,000/- ஆக உயர்த்தியது. 2009-2010 ஆம் ஆண்டில் 500 நலிந்த கலைஞர்கள் தெரிவு செய்யப்பட்டு, திங்கள்தோறும் ரூ.1,000/- நிதியுதவி வழங்கப்படும்.

25. பள்ளி இசை ஆசிரியர்களுக்கு அரசு இசைப் பள்ளிகள்மூலம் புத்தாக்கப் பயிற்சி.

உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள இசை ஆசிரியர்களுக்கு மாவட்ட அரசு இசைப்பள்ளி ஆசிரியர்கள்மூலம் கோடை விடுமுறையில் இலவச புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்படும்.

26. மாற்றுத் திறனுடைய குழந்தைகள் மற்றும் திருநங்கைகள் ஆகியோரின் கலைத்திறனை வெளிப்படுத்த கலைப்பயிற்சி.

மாற்றுத் திறனுடைய குழந்தைகள் மற்றும் திருநங்கைகள் ஆகியோரின் கலைத்திறனை வெளிப்படுத்தும் வகையில் மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள்மூலம் கலைப்பயிற்சி அளிக்கப்படும்.

2009 ஜூலை 7]

அருங்காட்சியங்கள் துறை

அறிவிப்புகள், 2009–2010

1. புதுக்கோட்டை அருங்காட்சியக நூற்றாண்டு விழா

1. புதுக்கோட்டை அருங்காட்சியக நூற்றாண்டு விழா கொண்டாடுவதற்கு ஏற்ற வகையில் இதனை நவீனப்படுத்தவும், பல்நோக்கு ஒலி-ஒளிக் காட்சி அறை கட்டுவதற்கும், காட்சிக் கூடங்கள் மற்றும் காட்சிப்படுத்துதலை நவீனப்படுத்தி மேம்படுத்துவதற்கு ரூ.*80.00* இலட்சம் செலவிடப்படும்.

2. கடந்த பல ஆண்டுகளாக கட்டட பழுதுபார்க்கும் பணி நடைபெற்று வந்த மானிடவியல் காட்சிக் கூடங்கள் புத்தாக்கம் செய்யப்பட்டு இந்த ஆண்டு *(2009-2010)* பொது மக்கள் பார்வைக்குத் திறந்து வைக்கப்படும்.

3. உலகப் புகழ் வாய்ந்த சுண்ணாம்பு கற்சிற்பங்களை உடைய அமராவதி காட்சிக் கூடம் சீர் செய்யப்பட்டு இந்த ஆண்டு *(2009-2010)* பொது மக்கள் பார்வைக்குத் திறந்து வைக்கப்படும்.

4. பொது மக்கள் மற்றும் மாணவர்கள் பயனடையும் வகையில் மாதந்தோறும் ஒரு சிறப்புக் கண்காட்சி நடத்தப்படும்.

தொல்லியல் துறை

அறிவிப்புகள், 2009–2010

1. திருநெல்வேலி மாவட்டம் இராஜாக்கல் மங்கலம் எனும் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடத்தில் அகழாய்வுப் பணி மேற்கொள்ளுதல்

திருநெல்வேலி மாவட்டம் இராஜாக்கல் மங்கலம் எனும் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடத்தில் அகழாய்வுப் பணி மேற்கொள்ள ரூ.*2* இலட்சம் செலவில் அகழாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

2. கல்வெட்டு நூல்கள், மாணவர் ஆய்வு நூல்கள், தருமபுரி, மராட்டா (தஞ்சாவூர்) மற்றும் தரங்கம்பாடி அகழ்வைப்பக வழிகாட்டி நூல்கள், தமிழ்நாட்டில் அகழாய்வுப் பணிகள், பத்து மாவட்டங்களின் பாரம்பரியம் குறித்த நூல்கள் அச்சிடல் மற்றும் கல்வெட்டு நூல்களை மறுபதிவு செய்தல்

[2009 ஜூலை 7

கல்வெட்டு நூல்கள், மாணவர் ஆய்வு நூல்கள், தருமபுரி, மராட்டா (தஞ்சாவூர்) மற்றும் தரங்கம்பாடி அகழ்வைப்பக வழிகாட்டி நூல்கள், தமிழ்நாட்டில் அகழாய்வுப் பணிகள், பத்து மாவட்டங்களின் பாரம்பரியம் குறித்த நூல்கள் அச்சிடல் மற்றும் கல்வெட்டு நூல்களை மறுபதிவு செய்யும் பணிகள் ரூ.5.25 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

3. அச்சுப் பிரிவிற்கு பாலிமர் பிரிண்டர், உரிய துணை உபகரணங்களுடன் மூன்று கணினிகள், தாள் வெட்டும் இயந்திரம் மற்றும் சேமிப்பு உபகரணங்கள் வாங்குதல்

அச்சுப் பிரிவிற்கு பாலிமர் பிரிண்டர், உரிய துணை உபகரணங்களுடன் மூன்று கணினிகள், தாள் வெட்டும் இயந்திரம் மற்றும் சேமிப்பு உபகரணங்கள் ரூ.6.90 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

4. லேமினேஷனுடன் நிழற்படங்களை ஏற்படுத்தி ஐந்து தொல்லியல் அகழ்வைப்பகங்கள் மேம்படுத்துதல்

லேமினேஷனுடன் நிழற்படங்களை ஏற்படுத்தி ஐந்து தொல்லியல் அகழ்வைப்பகங்கள் ரூ.1 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும்.

5. கோயம்புத்தூர், இராமநாதபுரம், திருநெல்வேலி, கரூர், தரங்கம்பாடி ஆகிய சார் அலுவலகங்களுக்கும், சென்னை பாதுகாப்பு மற்றும் நிர்வாகப் பிரிவுகளுக்கும் எட்டு கணினிகள் மற்றும் அவை சார்ந்த உபகரணங்கள்

கோயம்புத்தூர், இராமநாதபுரம், திருநெல்வேலி, கரூர், தரங்கம்பாடி ஆகிய சார் அலுவலகங்களுக்கும், சென்னை பாதுகாப்பு மற்றும் நிர்வாகப் பிரிவுகளுக்கும் எட்டு கணினிகள் மற்றும் அவை சார்ந்த உபகரணங்கள் ரூ.9.20 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

6. அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்திற்கு இரசாயன புகையூட்டி, இரசாயன பொருட்கள், டிஜிட்டல் பணிக்கு கணினி சார்ந்த உபகரணங்கள், லேமினேஷன் மற்றும் பைண்டிங் பொருட்கள் வாங்குதல்

அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்திற்கு இரசாயன புகையூட்டி, இரசாயன பொருட்கள், டிஜிட்டல் பணிக்கு கணினி சார்ந்த உபகரணங்கள், லேமினேஷன் மற்றும் பைண்டிங் பொருட்கள் ரூ.0.95 இலட்சத்தில் வாங்கப்படும்.

2009 ஜூலை 7]

7. முதலாம் இராசராசன் எழுப்பிய தஞ்சைப் பெருவுடையார் கோயில் கட்டி ஆயிரம் ஆண்டுகள் நிறைவடைகின்றன. இதனைச் சிறப்பிக்கும் வகையில் விழா ஒன்று விமரிசையாகக் கொண்டாடப்படும். அவ்வமயம் சிறப்பு நிகழ்ச்சிகள், நூல் வெளியீடு, கண்காட்சி ஆகியவை நடத்தப்படும்.

8. பூண்டி மற்றும் பூம்புகார் தொல்லியல் அகழ்வைப்பகங்கள் புதுப்பித்து விரிவாக்கப்படும்.

9. தொல்லியல் சின்னங்களைப் பாதுகாக்கும் பொருட்டு தொல்லியல் துறை சார்ந்த பிற துறைகளோடு இணைந்து ஒரு நாள் கருத்தரங்கம் நடத்தப்படும்.

10. மதுரை, திருமலை நாயக்கர் அரண்மனையில் கல்வெட்டுக்கென்று தனியான கல்வெட்டு காட்சியகம் ஒன்று அமைக்கப்படும்.

11. பாரம்பரிய தொல்லியல் சின்னங்களைப் பாதுகாக்கும் பொருட்டு மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கண்காட்சி நடத்தப்படும்.

TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்